# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
## Sessions Case No.94/2025

**Deposition of Witness for Prosecution PW 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செல்வி | Husband's Name | : | வெங்கடேஷ் |
| Village | : | வேளாங்கண்ணி | Taluk | : | வேளாங்கண்ணி |
| Calling | : | | Age | : | 46 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 12th day of June 2026.**

**(A1 present. A2 died).**

**முதல் விசாரணை**

நான் தற்போது வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கொரடாச்சேரி காவல் ஆய்வாளராக நிலைய அலுவலில் இருந்தபோது 13.07.2024 அன்று காலை 10.30 மணிக்கு அம்மையப்பன் கோமுட்டி தெருவில் வசிக்கும் வெள்ளைசாமி என்பவரது மகன் அருணாச்சலம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கொரடாச்சேரி காவல் நிலைய கு.எண் 273/2024, பாநிச பிரிவுகள் 296(பி), 351(3) r/w 25(1A) Arms Act ன்படி நான் பதிவு செய்த முதல்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.12 15:14:44 +0530

தகவலறிக்கை **அ.சா.ஆ.5**. அன்றைய தினமே காலை 11.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜா, கலைச்செல்வன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.6**. பகல் 14.00 மணியளவில் இவ்வழக்கில் எதிரிகள் பிரசாந்த் மற்றும் நந்தகுமார் ஆகியோரை அம்மையப்பன் சிவசக்தி பட்டு சென்டர் பஸ் ஸ்டாப் அருகே அடையாளம் கண்டு குற்ற காரணம் கூறி கைது செய்து சாட்சிகள் ராஜா, சரவணன் ஆகியோர் முன்னிலையில் எதிரி பிரசாந்த் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அதில் தகராறு செய்ய பயன்படுத்திய அருவாளை எடுத்து தங்களிடம் ஆஜர் செய்கிறோம் என்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.7**. பின்னர் 15.30 மணிக்கு அம்மையப்பன் சிவசக்தி பட்டு சென்டர் பஸ் ஸ்டாப் அருகே மேற்படி 2 சாட்சிகள் முன்னிலையில் எதிரி பிராசாத்திடமிருந்து சா.பொ.1, சா.பொ.2 யை அ.சா.ஆ.4 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். சா.பொ.1, சா.பொ.2 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.8**. 13.07.2024 அன்று சாட்சிகள் அருணாசலம், கந்தன், பேச்சிராஜா, ராஜா, கலைசெல்வன், ராஜா, சரவணன் ஆகியோர்களை விசாரித்து

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.12 15:14:48 +0530

வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். நான் பணி மாறுதலில் சென்று விட்டதால் வழக்கு கோப்பினை நிலைய பொறுப்பில் ஒப்படைத்து சென்றேன். எனக்கு பின்னிட்டு வந்த ஆய்வாளர் சிவகுமார் வழக்கு கோப்பில் அவரது புலன் விசாரணை முடித்து 23.05.2025 அன்று எதிரிகள் மீது பாநிச பிரிவுகள் 296(பி), 351(3) r/w 25(1A) Arms Act ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். ஆய்வாளரது விசாரணையில் சாட்சிகள் அருணாசலம், பேச்சிராஜ் ஆகியோர் சம்பவம் பற்றி கூறியதையே நான் வாக்குமூலங்களாக பதிவு செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

புகார்தாரர் கொடுத்த புகாரை சரிவர விசாரணை செய்யாமலும் சம்பவ இடம் செல்லாமலும் சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யாமலும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. வழக்காவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து ஜோடிக்கப்பட்டவை என்றால் தவறு. எதிரியை சொன்ன தேதி, இடத்தில் கைது செய்யவில்லை எனவும் எதிரி

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.12 15:14:53 +0530

எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை எனவும் எதிரியிடமிருந்து தடய பொருள் எதுவும் கைப்பற்றப்படவில்லை எனவும் சொன்னால் தவறு. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்புமில்லை என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.12 15:14:59 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.